<u>அசல் வழக்கு எண்: 61/2022</u>

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 23rd day of January 2026
வா.சா.1. எலத்திரியான், த/பெ. எத்திராஜ்,

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது தந்தையின் முதல் மனைவி எல்லம்மாள் 26.09.2019ம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அந்த இறுதி சடங்கில் நானும் எனது உறவினர்களும் கலந்துக்கொண்டோம் என்றால் சரிதான். எனவே எனது பெரியம்மா எல்லம்மாள் இறந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கில் எல்லம்மாளை 1ம் பிரதிவாதியாக குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எல்லம்மாள் இறந்த பிறகு எங்கள் உரிமையை தடை செய்ய வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். எனவே இந்த வழக்கை நான் பொய்யான விவரங்களை கூறி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பத் எனது பெரியம்மாவின் மகன் என்றும் அவர் இறந்ததால் 1ம் பிரதிவாதி எல்லம்மாள் தான் வாரிசு என்றால் எனக்கு அது தெரியாது. எனது பெரியம்மா எல்லம்மாள் இறப்பதற்கு முன்னரே எனது தாயார் சின்னக்குழந்தை அம்மாளை எனது தந்தை திருமணம் செய்ததால் அந்த திருமணம் செல்லாது என்றால் எனக்கு தெரியாது. எனவே இந்த வழக்கு சொத்தில் எனக்கு மட்டும் தான் பங்கு உள்ளது என்றும் எனது தாயார் சின்னக்குழந்தை அம்மாளுக்கு சட்டப்படி பங்கு கிடையாது என்றால் சரிதான். பெருமாள் கவுண்டர் எனது பெரியப்பா என்றால் சரிதான். அவர் தான் வா.சா.ஆ.1 கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். அந்த சொத்தின் சர்வே எண்கள் 111/1, 111/2, 111/3, 111/4, 111/5, 111/6, 125/1 பி, 174/3, 175/3, 174/4, 175/4, 234/3 ஏ, 234/3 பி, 129/3 எப், 279/4, 279/8 பி, 279/9 பி ஆகும். அவற்றின் விஸ்தீரணம் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ன் மூலம் எனது பெரியப்பா பெருமாள் கவுண்டர் எந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் வாங்கினார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனது பெரியப்பா சொத்துக்களை பரிவர்த்தனை எதுவும் செய்துக்கொண்டாரா என்று எனக்கு தெரியாது. எனது தந்தை அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தை தனது குடும்ப உறுப்பினர்களுடன் வா.சா.ஆ.5 மூலம் ஒரு பாகப் பத்திரம் ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரிதான். அந்த பாக பத்திரத்தில் எனது தந்தைக்கு 'D' அட்டவணை சொத்துக்கள் அவர் பங்கிற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தை கொண்டு தான் எனது தந்தை

வா.சா.ஆ.6 கிரைய சொத்தை வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. எனவே தாவா சொத்துக்களில் எனக்கு 1/4 பங்கும் எனது தந்தைக்கு 1/4 பங்கும் 2ம் பிரதிவாதி சுள்ளிக்கும் 1/4 பங்கும் இறந்து போன சம்பத்திற்கு 1/4 பங்கும் உள்ளது என்றால் சரிதான். சம்பத் இறந்துவிட்டதால் அவரது பாகம் வாரிசு அடிப்படையில் எனது பெரியம்மா எல்லம்மாளுக்கு மட்டும் தான் கிடைக்கும் என்றால் எனக்கு தெரியவில்லை. எனது தந்தை எனக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.7 செட்டில்மெண்ட் பத்திரத்தை வா.சா.ஆ–14 மூலம் ரத்து செய்து அன்றைய தேதியிலேயே வா.சா.ஆ.15 தான பத்திரம் எல்லம்மாளுக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்கு அது தெரியாது. மேற்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள நிலையில் அது குறித்து தெரியாது என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எல்லம்மாள் தனக்கு வா.சா.ஆ.15 மூலம் கிடைத்த சொத்துக்களை தனது மகளான சுள்ளிக்கு வா.சா.ஆ.16 மூலம் தான செட்டில்மெண்ட் கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு அது குறித்து அப்போது தெரியாது. வழக்கு தாக்கல் செய்யும் போது தான் தெரியும். அதன் பின்னர் அந்த சொத்திற்கான பட்டாவானது 2ம் பிரதிவாதி சுள்ளி பெயருக்கு பட்டா எண் 3960 –ன் கீழ் மாறியுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்கண்ட பட்டாவை என் பெயருக்கு மாற்றுவதற்கு வருவாய் துறையினரிடம் நான் முறையிட்டேனா என்றால் இல்லை. உண்மையில் நான் அவ்வாறு மனு கொடுத்து வருவாய் துறையினர் தான செட்டில்மெண்ட் மூலம் பெற்ற சொத்து என்பதால் அந்த பட்டாவை ரத்து செய்ய மறுத்துவிட்டனர் என்றால் சரியல்ல. நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள அனைத்து தாவா சொத்துக்களுக்கும் உரிமை கோருகிறேன். 2ம் பிரதிவாதி சுள்ளிக்கு எல்லம்மாள் தானம் கொடுத்த சொத்துக்கள் உரிமையை நான் விட்டு கொடுத்ததாக வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க ஒத்திவைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/– S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |